REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 ★ இலைகைப்பெ 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: பங்குனி 10உ சனி (23—3—57) ★ ★ வெளியூர்: பங்குனி 11உ ஞாயிறு (24—3—57) [இதழ் 244

தென் ஆப்பிரிக்காவில் கொடுமை!

25 கருப்பர்களை தூக்கிலிட்டனர்

★

ஆப்பிரிக்கா, மார்ச் 23—

இரண்டு ஐரோப்பிய, மூன்று ஆப்பிரிக்கப் போலீஸ்காரர்களை கொன்றதாக, மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த 22 ஆப்பிரிக்கரும் 3 கருப்பரும் தூக்கிலிடப்பட்டனர்.

தென் ஆப்பிரிக்காவில் ஒரே நாளில் இத்தனை பேர் தூக்கிலிடப்படுவது இதுவே முதல் தடவையாகும்.

கழகத்தவர் மீது தொடுத்த வழக்கு தள்ளுபடி!

நிரபராதிகள் என அனைவரும் விடுதலை

சென்னை, மார்ச் 23—

கடந்த 11—1—57 அன்று 41-வது வட்டத்தில் நடந்த கலவரத்தில், வட்டக் கழக உறுப்பினர்கள் மீது திராவிடக் கழகத்தினர் அநியாயமாக வழக்குத் தொடர்ந்தார்கள்.

சென்னை, எழும்பூர் நீதிமன்றத்தில் இரண்டு மாதமாக இந்த வழக்கு நடந்ததில் 21—3—57 அன்று, நீதிமன்ற ஏழாவது மாகாண நீதிபதி திரு. எம். முருகேச முதலியார் அவர்கள், இந்த வழக்கில் சம்பந்தப்பட்ட கிருட்டினன், மாக்கான்ராஜி, கண்காட்சி, முனுசாமி, வரதன், இலக்குமணன் ஆகிய அறுவரும் நிரபராதிகள் என்று சொல்லி வழக்கைத் தள்ளிவிட்டார்.

வழக்கு விவரம்:

சென்னை மெரினா பீச்சை அடுத்த பைகிராப்ட்ஸ் பாதையில் உள்ள வாராவதியில் திராவிடர் கழகத்தினர் நம் கழகத் தலைவர்களை மிகமிக மோசமான வார்த்தைகளால் திட்டி சுவர்களில் எழுதி இருந்தார்கள். அதைக் கண்ணுற்ற கண்காட்சி என்ற 17 வயது சிறுவர் சுவற்றில் உள்ள சுலோகங்களை அழித்தார். அந்தச் சிறுவரை திராவிடக் கழகத்தினரான அழகுக்கரசு, சுப்பையா, கபாலி, செல்வரசு ஆகிய நால்வரும் சேர்ந்து அடித்தார்கள். இந்த சிறுவனை அடிப்பதைப் பார்த்து பாதைவழியே சென்ற பொது மக்கள் பலர் அழகுக்கரசையும் சுப்பையாவையும் அடித்தார்கள். மற்ற இருவரும் ஓடி ஒளிந்துகொண்டார்கள். அடிபட்ட இருவரும் திருவல்லிக்கேணி D-1 போலீஸ் ஸ்டேஷனில் நம் கழக உறுப்பினர்கள் மீது புகார் செய்தார்கள். D-1 போலீஸ் இன்ஸ்பெக்டர் நம் கழக உறுப்பினர்கள் அறுவரையும் கமிஷனர் ரிமாண்டில் வைத்தார். மேற்கொண்டு வழக்குத் தொடரப்பட்டது.

'மார்க்சீயம்' பேசும் கே. டி. கே. தங்கமணிநாடார்

சிவக்கோலம் பூண்ட புதுமை

உசிலம்பட்டி, மார்ச் 20—

"மதுரை பாராளுமன்றத் தொகுதியில் பொது உடமைக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்ற கே. டி. கே. தங்கமணியைப்பாராட்டி உசிலம்பட்டியில் நேற்று ஊர்வலமும் பொதுக்கூட்டமும் நடைபெற்றது.

தோழர் தங்கமணி நகரின் மத்தியில் உள்ள கருப்பசாமி கோயிலுக்குச் சென்று இறை வழிபாடு செய்து திருநீறு அணிந்தார்."

—'சுதேசமித்திரன்'
22—3—57

★

கோவையில் இரும்பு உற்பத்திசாலை

தனியார்துறையின் கீழ் நிறுவப்படும்

புதுடில்லி, மார்ச் 22—

சேலத்தில் கிடைக்கும் இரும்புக் கனிப் பொருள்களைகொண்டு கோவையில் தனியார் துறையில் ஆண்டுக்கு 15,000 டன் பாள இரும்பு தயாரிக்கும் திட்டத்திற்கு அரசாங்கம் அனுமதியளித்திருப்பதாக, இன்று மக்கள்சபையில் கனரகத் தொழில் அமைச்சர் மனுபாய் ஷா தெரிவித்துள்ளார்.

அரசாங்க பாங்கிக் கிளைகள்

புதுடில்லி, மார்ச் 21—

மத்திய வரவின பாதுகாப்புச் செலவின மந்திரி ஸ்ரீ அருண் சந்திர குஹா இன்று மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், 1956 ஜூலை 1-ந் தேதியிலிருந்து 1957 பிப்ரவரி 28-ந் தேதிவரை உள்ள காலத்தில் இந்திய அரசாங்க பாங்கியின் கிளை அலுவலகங்கள் திறந்து வைக்கப்பட்ட இடங்களின் பெயர் விவரங்களடங்கிய அட்டவணையொன்றைச் சபையில் தாக்கல் செய்திருக்கிறார்.

அந்த அட்டவணைப்படி, இந்த எட்டு மாத காலத்தில் 42 கிளைகள் திறந்து வைக்கப்பட்டிருக்கின்றன; இவற்றில் பீஹாரில் மூன்று கிளைகளும், ஆந்திராவில் எட்டும், பம்பாயில் பன்னிரண்டும், மத்தியப் பிரதேசத்தில் ஐந்தும், சென்னையில் எட்டும், மைசூரில் இரண்டும், ஒரிசாவில் இரண்டும், பஞ்சாபில் ஒன்றும், மேற்கு வங்காளத்தில் ஒன்றும் திறந்து வைக்கப்பட்டுள்ளன என்று தெரிகிறது.

ஒப்பந்தம் விஸ்தரிப்பு

புதுடில்லி, மார்ச் 21—

இந்தியா-பின்லாந்து வர்த்தக ஒப்பந்தத்தின் செல்லுபடிக் காலம் 1957 டிசம்பர் 31-ந் தேதி வரை நீடிக்கப்பட்டு, அது சம்பந்தமான கடிதங்கள் இந்திய சர்க்கார் பிரதிநிதிக்கும் பின்லாந்து சர்க்கார் பிரதிநிதிக்குமிடையே புதுடில்லியில் மாற்றிக்கொள்ளப்பட்டன.

தங்கம் கள்ளக் கடத்தல்

சுங்க அதிகாரகள் 1956 எப்ரல் 1-ந் தேதியிலிருந்து 1957 பிப்ரவரி 28-ந் தேதிவரையில் மொத்தம் ரூ. 1,02,15,592 மதிப்புள்ள சுமார் 1,04,140 தோலா கள்ளக் கடத்தல் தங்கத்தைக் கைப்பற்றியுள்ளனர் என்று டி. டி. கே. மக்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

சண்டையை நிறுத்த பேச்சுவார்த்தைகள்!

நிபந்தனைகளுடன் கம்யூனிஸ்டுகள் கோரிக்கை

கோலாலம்பூர், மார்ச் 22—

மலாயா கம்யூனிஸ்டுக் கட்சியினர் கடந்த ஒன்பதாண்டுக் காலமாக நாட்டில் நடைபெற்றுவரும் 'சண்டை'யை நிறுத்தும் பொருட்டு, பேச்சுவார்த்தை துவங்குமாறு சர்க்காரைக் கேட்டிருப்பதாகத் தெரிகிறது.

கம்யூனிஸ்டுகள், பேச்சுவார்த்தை துவங்குமாறு கோரியிருக்கிறார்கள் என்ற இந்தச் செய்தி அதிகாரபூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

'சமாதான'ப் பேச்சுவார்த்தைகளுக்கு கம்யூனிஸ்டுகள் மூன்று நிபந்தனைகளை விதித்திருக்கின்றனராம்.

1. ஜனநாயக நாடுகளில் கிடைக்கும் சகல உரிமைகளும், கம்யூனிஸ்டுகள் உட்பட எல்லா மலாய மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.

2. எல்லா மட்டங்களிலும் தேர்தலில் பங்குபெறும் உரிமைகள் உட்பட சகல உரிமைகளும், கம்யூனிஸ்டுகளுக்குத் தரப்படல் வேண்டும்.

3. மலாய கம்யூனிஸ்டுகளும் மலாய இனங்களின் விடுதலை இராணுவத்தை (கம்யூனிஸ்டு கொரில்லாக்கள்)ச் சேர்ந்தவர்களும் போராட்டத்தில் பங்கு பெற்றமைக்காக, தண்டிக்கப்படக் கூடாது என்பவைகளாம் அவைகள்!

குருவின் வழியில் சீடர்!

குடியேற்றம், மார்ச் 23—

கம்யூனிஸ்டு அபேட்சகர் வெற்றிக்காக அம்மனுக்கு 'அபிஷேகம்' நடத்தினர்கள் குடியேற்றம் ஆலைத் தொழிலாளர்கள்!

சென்னை சட்டசபைத் தேர்தலில் குடியேற்றம் தொகுதியில் கம்யூனிஸ்டு அபேட்சகர் வி. கே. கோதண்டராமன் வெற்றி பெற்றுள்ளார்.

இந்த வெற்றிக்காக குடியேற்றத்தில் உள்ள 'அம்மன்' கோவிலில், கோதண்டராமன் தலைமையில் திரண்டுள்ள ஆலைத் தொழிலாளர்கள் அபிஷேகம் நடத்தினர்கள். பிறகு பிரசாதத்தை (சாமிக்கு படைத்தவை) மக்களுக்கு கொடுத்தார்கள்.

இதைத் தொடர்ந்து ஒரு பெரிய ஊர்வலம் நடத்தப்பட்டது. அப்போது வாண வேடிக்கைகள் நடந்தன.

—'தினத் தந்தி'
சென்னை: 23—3—57

'யதார்த்தவாதி'களின் குழப்பத்திற்கு மேலும் ஒரு சான்று!

'ஏ. கே. கோபாலனுக்கு கம்யூனிஸ்டு தலைவர் சூடு'!

மக்கள் சபையில் தாமஸ் விளக்கம்

கேரளாவில் கம்யூனிஸ்டு சர்க்கார் ஏற்பட்டால், தேயிலைத் தோட்டங்களைத் தேசிய மயமாக்கிவிடும் என்று திரு ஏ. கே. கோபாலன், சமீபத்தில் சொன்னார். ஆனால் அவருடைய கட்சித் தலைவரான திரு கோவிந்தன் நாயரோ, தேசிய மயமாக்கும் விஷயம் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்றும், அது பற்றி முடிவுசெய்ய வேண்டியது மத்திய சர்க்கார் என்றும், அப்படி ஏதாவது நடவடிக்கை எடுத்தாலும், தம் கட்சி மெதுவாகத்தான் செல்லும் என்றும் குறிப்பிட்டார். அம்மாதிரி அவர் பேசியது அவசரப்பட்டு வார்த்தைகளை வெளியிட்ட திரு ஏ. கே. கோபாலனுக்கு ஒரு சூடு கொடுத்த மாதிரி தோன்றுகிறது என்று திரு. ஏ. எம். தாமஸ் என்ற காங்கிரஸ் உறுப்பினர், டில்லி மக்கள் சபையில், 'தேயிலைத் தொழில் தேசியமயமாக்க வேண்டும்' என்ற தனி நபர் தீர்மானத்தை எதிர்த்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

தீர்மானத்தை ஆதரித்துப் பேசிய டாக்டர் சி. வி. ராமராவ் என்ற ஆந்திர கம்யூனிஸ்டு உறுப்பினர், நியாயமான நஷ்டஈட்டினை தேயிலைத் தோட்ட முதலாளிகளுக்குத் தருவதைத் தாம் ஆட்சேபிக்கவில்லை என்றும், ஆனால் கோலார் தங்க வயல்களுக்குக் கொடுத்தது போன்று கண்ணை மூடிக்கொண்டு ஏராளமான அளவில் எந்தக் காரணத்திற்காகவும் கொடுக்கக்கூடாது என பேசினர்.

ஒரு வேடிக்கை

இந்தத் தீர்மானத்தை, சென்ற மக்கள் சபைக் கூட்டத்தில் கொண்டுவந்தவர் தோழர் ஏ. கே. கோபாலன். ஆனால், அவர், இந்தத் தீர்மானம் மக்கள் சபையில் விவாதிக்கப்பட்டபோது, சபையில் இருக்கவில்லை என்று செய்திகள் கூறுகின்றன. கம்யூனிஸ்டு கட்சி சார்பில் இரண்டு சாதாரண உறுப்பினர்களே இருந்தனராம்.

மற்றுமொரு வேதனை

இந்தத் தீர்மான விவாதத்தின் போது 500 மக்கள் சபை உறுப்பினர்களில் 30 பேர்களே ஆஜராயிருந்தனராம்.

உலகே மாயம்—வாழ்வே மாயம்!

கம்யூனிஸ்டுகளின் கொள்கையே மாயம்!

"...வேலை கிடைக்கவில்லையே என்று மாணவர்கள் சோர்ந்து விடக்கூடாது என்று கூறிவிட்டு, பெரும்பகுதி படிப்பு வாசனையறியாத நாட்டு மக்களின் கலாச்சார, பொருளாதார வாழ்க்கை மேம்பாட்டிற்காக மாணவர்கள் பணிபுரிய வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

"வாழ்க்கை மகோன்னதமானது என்றும், வாழ்க்கையில் மாணவர்களுக்கு நம்பிக்கை வேண்டும் என்றும் கூறினர்.

விருந்துபசாரத்துக்கு நன்றி கூறிப்பேசிய மாணவர்கள், மேற்கண்டவாறு கூறிய திரு. சங்கரநாராயணன் அவர்களின் ஈடு இணையற்ற போதனைத் திறமையைப் பாராட்டியதோடு, தங்களது வாழ்வில் அன்னாரை மறக்கவே முடியாது என்றும் குறிப்பிட்டனர்.

—'ஜனசக்தி'
சென்னை: 21-3-57

நம் நாடு
தி. மு. கழகத்தின் இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 23—3—57 சனி

எதற்கும் அறிவும்-பண்பும் வேண்டும் அல்லவா?

'திராவிட முன்னேற்றக் கழகம் தமிழகம் முழுதும் பரவி இருக்கிறது என்ற உண்மையை இந்தத் தேர்தல் மெய்ப்பித்து விட்டது' என்று, முன்னாள் சட்டசபைத்துறை செயலாளராக இருந்த கிருஷ்ண அய்யர் அவர்கள் அறிவித்துள்ளார். அதுவுமன்றி, காங்கிரசுக் கட்சிக்கு அடுத்த வரிசையில் உள்ளகட்சியாக இருப்பதுடன், பலம் பொருந்திய கட்சியாகவும் கழகம் இருந்துவருகின்ற உண்மையும் தேர்தல் மூலம் தெளிவாகிவிட்டிருப்பதாக அவர் வலியுறுத்திக் கூறியும் உள்ளார்.

இவ்வாறு, நமது கழகத்தின் உண்மையான நிலைமையைக் குறித்து உள்ளது உள்ளவாறு மதிப்பிட்டுக்கூறி இருக்கும் ஆர். வி. கிருஷ்ண அய்யர் நமது கழகத்தைச் சேர்ந்தவர் அல்லர்; அனுதாபியும்கூட அல்ல.

அவரை ஒரு நடுநிலையாளர் எனக் கூறுவதைவிட, காங்கிரசு சார்புடையவர் எனக் கூறுவதே பொருந்தக்கூடியதாகும். இருந்தாலும், தேர்தல் தரும் பாடத்தை மறைக்க விரும்பாது, ஓரளவிற்கு மறுக்கவும் முடியாது, முன்னேற்றக் கழகம் தமிழகத்தில் பெற்றுள்ள இடத்தையும் பலத்தையும் திட்டவட்டமாகக் கூறியுள்ளார் அவர்.

அவர் ஆய்வுரை ஒருபக்கம் இருக்க, தேர்தல் நேரத்தில் நமது தலைவர்களைத் தனித்த முறையில் முறைகேடாகத் தூற்றி, நம்மை வீழ்த்தப் பறித்த குழியிலேயே தன்னிச்சையாகத் தன்னைப் புதைத்துக் கொண்ட - அரசியல் தற்கொலை நாடகமாடிய பொதுவுடைமைக் கட்சி, தேர்தலுக்குப் பிறகு கூறியுள்ளதைப் பார்ப்போம். கொள்கைக் குழப்பத்தையே அடிப்படையாகக் கொண்டு செயல்பட்டு வரும் அக்கட்சியும்கூட, நமது கழகத்தின் பலத்தைக் குறைத்து மதிப்பிட்டுவிட்டதாகக் கூறவேண்டிய கட்டாயத்தைத் தேர்தல் படிப்பினையாகப் பெற்று இருக்கிறது.

அந்த அளவுடன் இருந்துவிடாது, 'தமிழ் மக்களிடை— குறிப்பாக இளைஞரிடை தி. மு. கழகம்தான் வேறெந்தக் கட்சியையும்விடத் தமிழர் நலம் பேணுவதில் சிறந்த கட்சி என்ற எண்ணத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறது' எனக் கூறுவதின் மூலம், தம் கட்சியைவிட தமிழ் மக்களிடம், முன்னேற்றக் கழகத்திற்கு அதிக ஆதரவு இருக்கிறது என்ற மகத்தான தேர்தல் படிப்பினையை, தம்மியல்புப்படி ஒப்ப மனமில்லாமல் ஒப்புக்கொண்டு இருக்கின்றனர் தமிழ்நாட்டுப் பொதுவுடைமையினர்.

விஞ்ஞான அரசியல், யதார்த்த உண்மை, வர்க்க நலன் என்றெல்லாம் சிற்றுண்டி உண்பதில்கூட உரிமை கொண்டாடும் பொதுவுடைமைக் கட்சியினர்கூட, தமிழ் மக்களிடம் அதிலும் குறிப்பாக இளைஞர்களிடம் நமது கழகம் பேராதரவு பெற்ற வகையினைப் புரிந்து கொள்ள இயலாது குழம்பின போதிலும், பெற்றுள்ள பேராதரவை ஒளிவுமறைவு இல்லாமல் ஒப்புக்கொண்டுள்ளனர்.

காங்கிரசைத் தோற்கடிப்பதைவிட நமது கழகத்தை ஒழிப்பதையே தங்கள் தேர்தல் இயக்கமாக நடத்திய தமிழ்நாடு பொதுவுடைமை கட்சியினர்கூட, நமது கழகத்திற்குக் கிடைத்துள்ள செல்வாக்கு 'தீங்கு பயப்பது' எனக் கருதியிருந்தபோதிலும்கூட, தமிழ் மக்களிடம் நமது கழகத்திற்குள்ள பற்றுதலை மறைக்காது ஒப்பியுள்ளனர். அவ்வாறு கூறுவதன் மூலம் தேர்தலில் தாங்கள் மேற்கொண்ட அடிப்படை முயற்சியில், கரங்கள் துண்டிக்கப்பட்டு கால்கள் வெட்டப்பட்டு உருவம் குலைக்கப்பட்டு வீழ்ச்சியுற்ற சோகக் கதையை ஒப்பாமல் ஒப்பியும் உள்ளனர் அவர்கள்.

தமிழகத்தில் நமது கழகத்திற்கு உள்ள ஆதரவு அபரிமிதமானது. இருந்துவரும் செல்வாக்கு சிறப்பானது. இவ்வுண்மையைத்தான் தேர்தல் மெய்ப்பித்துக் காட்டியிருக்கிறது.

கண்ணுக்கு நேராகத் தெரியும் இப்பிரத்யட்ச உண்மையை மக்கள் கண்ணிலும் கருத்திலுமிருந்து மறைத்து விடுவதற்கு மார்க்சிய சித்தாந்தத்தில் மார்க்கம் காணாது தவிக்கும் கதியற்ற நிலையில்தான் தமிழ்நாட்டுப் பொதுவுடைமையர்கள், நமது கழகத்தின் பலம் குறித்துத் தேர்தல் காட்டிய பாடத்தை, விளக்கெண்ணெய் சாப்பிடுபவர் போல் வேண்டாவெறுப்பாக விளம்பியுள்ளனர்.

ஆனால் நமது மாநில முதலமைச்சர் இருக்கின்றாரே, சத்தியசந்தர் காமராசர் அவர்கள், நமது கழகத்திற்குக் கிடைத்துள்ள வெற்றி குறித்தும், அவ்வெற்றியை நமது கழகத்திற்குத் தேடித்தந்த வாக்காளர் பெருமக்களின் மனப்போக்குபற்றியும், தமக்கும் நியாயத்திற்கும் நெடுநாள் பகை - நேர்மை இருக்கும் திக்கு நோக்கி தாம் தலைவைத்துப் படுத்ததும் இல்லை— அறநெறிக்கும் தமது வாழ்க்கைக்கும் பெரும் பகை—என்பனவற்றைத் தெளிவுபட வெளிப்படும் வகையில், தனது சிறுமைக் குணத்தைக் காட்டிக் கொண்டுள்ளார்.

அவர் கூறுகிறார்,

"தி. மு. கழகம் பெற்ற சுமார் 15,53,434 வாக்குகளும் எந்தக் கொள்கைகளையும் ஆதரித்துப் போடப்பட்டவை அல்ல; ஆனால், காங்கிரசுக்கு எதிர்ப்பான ஓட்டுகள்தாம் அவை; காங்கிரசு அல்லாத மற்றக் கட்சிகளைவிட தி. மு. கழகம் அந்தப் பகுதிகளில், அதிகமான பலம் வாய்ந்ததாக இருந்தமையால் காங்கிரசு எதிர்ப்பு வாக்குகளை சேகரித்துக் கொண்டது"—என்று.

தேர்தலில் நமது கழகம் பங்குகொள்ளப் போகிறது எனக் கேள்விப்பட்டது முதல் தேர்தல் முடிகின்றவரையில் ஊணின்றி உறக்கமின்றி, ஊர் ஊராகப் பேய்போல் சுற்றி அலைந்து, அதிகாரத்தை அதர்ம வழியில் செலுத்தி, இலட்சம் இலட்சமாகப் பணத்தை வாரி வீசி, பாதத்தைப் பற்றி கரத்தைப் பிடித்துக் கெஞ்சி, இவ்வளவு கயமை முயற்சிகளுக்குப் பிறகு வெற்றி வீரராக விளங்கும் இந்த அநீதியின் சொரூபம், முன்னேற்றக் கழகத்திடம் பட்ட தொல்லைகளை எல்லாம் மறந்து, முன்னேற்றக்கழகத்தை குறைத்து மதிப்பிட்டுப் பேசுவது வியப்புக்குரியதேயாகும். எதற்கும் அறிவு வேண்டும் அல்லவா?

மக்கள் சபையில் அரியலூர் எதிரொலி!

புதுடில்லி, மார்ச் 21—

அரியலூர் இரயில் விபத்திற்குக் காரணமான எல்லா அதிகாரிகளையும் அரசாங்கம் தண்டிக்காமல் விடாது என்றும், இந்த விபத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, கூடுதலாக நஷ்டஈடு தர முடியுமா என்பதைப் பற்றி அரசாங்கம் ஆராய்ந்து வருவதாகவும், அரியலூர் விபத்து ஒரு 'சோக சகாப்தம்' என்றும் மக்கள்சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இரயில்வே அமைச்சர் செகசீவன்ராம் தெரிவித்துள்ளார்.

நடுத்தர வகுப்பினருக்குக் குடியிருப்பு வசதி

திட்டத்தைக் கைவிட்டுவிடும்படி சிபாரிசு

புதுடில்லி, மார்ச் 22—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள நடுத்தர வகுப்பினருக்கான குடியிருப்பு வசதித் திட்டத்தை, திட்டத்திலிருந்து நீக்கிவிடும்படியும், அதற்காகத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 5 கோடியை, திட்டத்தில் அடங்கியுள்ள இதர குடியிருப்பு வசதித் திட்டங்களுக்குத் திருப்பிவிடும்படியும் குடியிருப்பு வசதி பற்றிய துணைக்குழு சிபாரிசு செய்திருக்கிறதாம். இந்தச் சிபாரிசைத் திட்டக் குழு ஏற்றுக்கொண்டிருக்கிறதாம். ஆயினும், நடுத்தர வகுப்பினருக்கு, ஆயுள் இன்சூரன்ஸ் கார்ப்பரேஷன் கடன் கொடுத்துதவுவதற்குள்ள சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்தறிய வேண்டுமென்று குழு சிபாரிசு செய்தது என்றும் இது சம்பந்தமாக இப்பொழுது ஆராயப்பட்டு வருகிறது என்றும் மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உற்பத்தி அமைச்சர் கூறியுள்ளார்.

மலபார் புறக்கணிக்கப்பட்டதா?

குற்றச்சாட்டை மறுக்கிறார் கிருஷ்ணமாச்சாரி

புதுடில்லி, மார்ச் 21—

மக்கள் சபையில், கேரள மாநில வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது ஒரு உறுப்பினர் சென்னை மாநில சர்க்காரால் மலபார் புறக்கணிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினார்.

இதனை மறுத்துப் பேசிய டி. டி. கிருஷ்ணமாச்சாரி, "மலபார் மாவட்டமும் இதர மாவட்டங்களைப் போலவே நடத்தப்பட்டது; மத்திய சர்க்காரும் மலபாருக்கு முடிந்ததை செய்துவந்தனர்; இரண்டு கைத்தறி நெசவாலைகள் நிறுவப்பட்டன; ஒரு 'தொழில் எஸ்டேட்' உருவாக்கப்பட்டது" என்று விளக்கம் தந்தார் எனத் தெரிகிறது.

கண்டிக்கிறார்- கனல் கக்குகிறார்!

"இராணுவ ஒப்பந்தங்கள்— அது வார்சா ஒப்பந்தமோ (ரஷ்ய வல்லரசின் குழந்தை), 'சீட்டோ'வோ, 'பாக்தா'தோ —எதுவானாலும், நாங்கள் அவற்றை எதிர்க்கிறோம் என்பதை உறுதி செய்கிறேன்"

என்று, பண்டித நேரு, மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

வடநாட்டுத் திட்டம் முன்னேறும் வேகம்!

17 கப்பல்களில் சாமான்கள் வந்துவிட்டனவாம்

புதுடில்லி, மார்ச் 21—

"பிலாய் எஃகுத் தொழிற்சாலைக்கான சாதனங்கள், எஃகு சாமான்களை ஏற்றிக்கொண்டு 17 கப்பல்கள் ரஷ்யாவிலிருந்து வந்திருக்கின்றன" என்று டி. டி. கே. மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

கேட்டீரா, சேதி!

ஐதராபாத், மார்ச் 21—

திருப்பதியில் அர்ச்சகர்கள் பயிற்சி நிலையம் ஒன்றிருக்கிறது; இதில் தாழ்த்தப்பட்டோரும் அனுமதிக்கப்படுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தும் கூட இதுவரையில் ஒருவரிடமிருந்தும் விண்ணப்பம் வரவில்லையாம்!

புதுடில்லி, மார்ச் 21—

காஞ்சிபுரத்திலிருந்து வேலூருக்கு நேர் இரயில் பாதை போடுவது சம்பந்தமான துப்புறவு வேலை முடிவடைந்துவிட்டதென்றும், ஆனால் அறிக்கைமட்டும் இன்னும் தயாராகவில்லையென்றும் ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

நாட்டின் உணவுநிலைமை

வெளிநாடுகளிலிருந்துஇறக்குமதி செய்யப்பட்டது எவ்வளவு?

புதுடில்லி, மார்ச் 22—

1957 பிப்ரவரி மாதத்தில், நாட்டில் உணவு நிலைமையில் அபிவிருத்தி காணப்பட்டது என்றும், அம்மாதத்தில் மொத்தம் 1,47,800 டன் கோதுமையும், 62,400 டன் அரிசியும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்றும், மக்கள் சபையில் மத்திய உணவு விவசாய மந்திரி கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறியுள்ளார்.

பரிசோதனைக்கே பலகோடி ரூபாயை பாழ் செய்வது நியாயமா?

வெற்றி கிட்டுமா என்றே பரிசோதனையாம்

'அம்பர் சர்க்கா'வைத் தூக்கி வைத்துப் பேசுகிறார் பண்டிதர்

புதுடில்லி, மார்ச் 21—

"அம்பர் சர்க்கா விவகாரத்தை நாங்கள் ஒன்றும் தத்துவ நோக்கத்தோடு அணுகவில்லை; விஞ்ஞானக் கண்ணோடுதான் அணுகுகிறோம்"

என்று, சவடால் அடித்திருக்கிறார், பண்டித நேரு!

"அம்பர் சர்க்கா போன்ற திட்டங்களுக்கு, அவை எந்தவித பலனும் அளிக்காததால், பணத்தை சர்க்கார் வீணாக்கிக் கொண்டிருப்பானேன்?"

என்று, மக்கள் சபையில் கேட்டபோது, மேற்கண்டவாறு, கூறிவிட்டு, மேலும் நேரு கூறினாராம்:—

"இப்போது அம்பர் சர்க்கா திட்டம் வெற்றி பெற்றுவிட்டதாக நான் கூறமாட்டேன்; ஆனால், கையால் நூல் நூற்கும் தொழிலில் அது ஒரு முன்னேற்றமான படியாகும். அது, தினம் வளர்ச்சியடைந்து வருகிறது. நூல் நூற்றலில் பழைய கைமுறையைவிட இது எவ்வளவோ முன்னேற்றமானதாகும்; மேலும் முன்னேற்ற முடியுமா என்பதற்குத்தான் பரிசோதனை; வெற்றி கிட்டினால் அது ஒரு குட்டிப் புரட்சியாயிருக்கும்."

பொருளாதார நெருக்கடி

பிரான்சில் நிலவுகிறது

பாரீஸ், மார்ச் 22—

பிரான்ஸ் இப்போது கடுமையான பொருளாதார நெருக்கடியில் அகப்பட்டுகொண்டிருப்பதாகவும், இது இன்னும் நான்கு அல்லது ஐந்தாண்டுகள் நீடித்திருக்கக்கூடுமென்றும் பிரெஞ்சு சட்டசபையில் நிதி மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்கள்

செலவிடப்பட்டுள்ள தோகை பற்றி மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, மார்ச் 22—

முதலாவது திட்டத்தில், குடும்பக் கட்டுப்பாடுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூ. 65 இலட்சத்தில் ரூ. 20,41,000 செலவிடப்பட்டதாக மக்கள் சபையில் சுகாதார அமைச்சர் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் முத்துக் குளிப்பு ஆரம்பம்

தூத்துக்குடி துறைமுகத்தில் கடந்த 14-ந் தேதி முத்துக் குளிப்பு ஆரம்பமாகியது; 15-ந் தேதியன்று 5,12,251 முத்துச் சிப்பிகளும், 19-ந் தேதியன்று 2,46,538 முத்துச் சிப்பிகளும் எடுக்கப்பட்டதாம்.

நெருக்கடியைச் சமாளிக்க ஒத்துழைப்பு

இராணுவ அதிகாரி கோரிக்கை

ஜாகார்த்தா, மார்ச் 22—

"இந்தோனேஷியாவில் தற்போது உருவாகியுள்ள நெருக்கடியைச் சமாளிக்கவும், நல்ல முயற்சிகளில் ஈடுபடவும், தலைவர் சுகர்ணோவும் - டாக்டர் அட்டாவும் ஒன்றுபட்டுப் பாடுபட வேண்டும்"

என்று, இந்தோனேஷிய இராணுவத்தின் அதிகாரி ஒருவர் அறிக்கை ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தேர்தலுக்குப் பிறகு மின்சார விநியோகத்தில் முதல் வெட்டு

ஏப்ரல் முதல் அமுலாகக்கூடும்?

சென்னை, மார்ச் 22—

பைகாரா, பாபநாசம் மற்றும் சென்னை மின்சார திட்டங்களிலிருந்து விநியோகிக்கப்படும் மின்சாரத்தின் அளவு கட்டுப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மின்சாரத் திட்டத்தைச் சேர்ந்த செங்கற்பட்டு மாவட்டத்தில் நீர்விசை மின்சாரப் பிரதேசம் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவுக்கும் தினசரி 10 மணி நேரம், பகலும் இரவுமாக மாறி மாறி மின்சாரம் விநியோகிக்கப்படும். மின்சாரம் அதிகமாய்த் தேவையான மாலை நேரங்களில் இரு பிரிவுகளும் இயங்கும். பைகாரா பாபநாசம் திட்டங்களிலும் இது போன்ற முறைகள் கையாளப்படும் என்று தெரியவருகிறது.

25 சதவிகிதம் வெட்டு?

திருச்சிராப்பள்ளி, மார்ச் 22—

ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இங்கு மின்சார விநியோகத்தில் 25 சதவிகிதம் குறைப்பு ஏற்படலாம் எனத் தெரிகிறது. நீர்விசை மின்சார உற்பத்தித் திட்டத்தில் மின்சார விசை உற்பத்திக் குறைவே இதற்குக் காரணம்.

10 குதிரை சக்திக்கு மேற்பட்ட மின்சார சக்தியை உபயோகிக்கும் புதிய தொழிற்சாலைகளைத் துவங்குவதற்கும் ஏப்ரல் முதல் அனுமதி மறுக்கப்படும் என்றும் தோன்றுகிறதாம்.

இந்தக் கட்டுப்பாடு, அத்தியாவசியத் தேவைகள் விஷயத்தில் அமுலாகாதாம்! மற்றும் வீட்டுத் தேவைகளுக்காக மாதம் 20-யூனிட்டுகளுக்குக் குறைந்த மின்சாரம் பயன்படுத்துவோர் விஷயத்திலும் இது அமுலாகாதாம்.

ரூ. 15 கோடிக்கு புது வரி விதிப்பு

(4-ம் கலத் தொடர்ச்சி)

போது, சந்தானம், 'பம்பாயோடு ஒப்பிட்டால், சென்னை பின்தங்கியதுதான்; ஆனால், 14 மாநிலங்களையும் கூட்டாகக் கணக்கிட்டால், நான், சென்னை பின்தங்கிய மாநிலம் என்று கருதமாட்டேன்' என்றும் கூறியிருக்கிறார்.

15 கோடி புதிய வரி

"சென்னை மாநில சர்க்கார் இரண்டாம் திட்டக்காலத்தில் புது வரிகள் விதிப்பதன் மூலம் ரூ. 15 கோடி திரட்ட ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இது அவர்களால் முடியாத ஒன்று என நான் கூறமாட்டேன்,"

என்றும், திட்டத்திற்கு நிதி வழிகள் பற்றிக் கேட்ட கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் சந்தானம் கூறியிருக்கிறார்.

தேர்தல் நிதி

சென்னை - வண்ணை (பேசின் பிரிட்ஜ் ரோடு) தோழர் டி. மாசிலாமணி அவர்கள் தி. மு. க. தேர்தல் நிதிக்காக ரூ. 19—2—0 அளித்துள்ளார்.

* * *

விளாத்திகுளம் அண்ணா செய்தி மன்றம் தோழர் பி. தங்கவேலன் அவர்கள் கழக தேர்தல் நிதிக்காக ரூ. 4—9—0 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

நெல்லை மாவட்டம் சிவகிரித் தோழர் மு. க. தி. சோலையப்பன் அவர்கள் கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 1—12—0 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

மதுரைத் தோழர் எஸ். காமாட்சி அவர்கள் மூலமாக தி. மு. க. தேர்தல் நிதிக்காக ரூ. 7—8—0 கிடைக்கப் பெற்றுள்ளோம்.

* * *

திருச்சி மாவட்டம் நமணசமுத்திரம் தி. மு. க. சார்பில் தேர்தல் நிதிக்காக ரூ. 20 அன்பளிப்பாகத் தரப்பட்டிருக்கிறது.

* * *

திருவாரூர் விசயபுரம் பண்ணை ஸ்டோர் தோழர் செ. கிருட்டிணமூர்த்தி அவர்கள் கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 7-8-0 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

* * *

கோவை மாவட்டம் வேவரளி எஸ்டேட் தோழர் க. குழந்தையப்பன் அவர்கள் கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 3—4—0 அன்பளிப்பாகத் தந்துள்ளார்.

கழகத் தோழர்களின் வெற்றிதரும் மகிழ்ச்சிப் பெருக்கு

நாடெங்கிலும் கொண்டாட்டம்

ஜனநாயகக் கடமையாற்றத் தேர்தலில் களம்புகுந்த கழக வீரர்களின் வெற்றிகேட்டு, பல இடங்களில் மகிழ்ச்சிப் பெருக்கின், காரணமாகப் பாராட்டு ஊர்வலங்களும், கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன; அவற்றின் சுருக்கம் இங்கு தரப்படுகிறது:—

பெருமகளூர்:

அண்ணா அவர்கள் வெற்றி பெற்றதற்குப் பாராட்டுத் தெரிவிக்கும் பொருட்டு 8—3—57 மாலை 7-30 மணியளவில் பெருமகளூர் தி. மு. கழகச் சார்பில் ஓர் ஊர்வலம் நடைபெற்றது.

திருச்சி:

தோழர் மு. கருணாநிதி வெற்றி குறித்து திருச்சி தேசீயக் கல்லூரி உணவு விடுதி மாணவர்களால் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. விழாவில் இனிப்புப் பொருள்களும், வாசனைப் பொருள்களும் கலந்துகொண்ட பொதுமக்களுக்கும் எழுத்தாளர்கள் அகிலன், சுகி ஆகியோருக்கும் வழங்கினர்.

மேலப்பாளையம்:

அண்ணா, மு. கருணாநிதி ஆகியோர் வெற்றி பெற்றதைப் பாராட்டி 17—3—57 இரவு 9-மணியளவில் வெற்றிவிழா ஊர்வலமும், பெரியகடை வீதியில் பாராட்டுக் கூட்டமும் நடைபெற்றது.

அலங்காநல்லூர்:

அண்ணா அவர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டி அலங்காநல்லூர் தி. மு. க. சார்பில் வெற்றிவிழா கொண்டாடப்பட்டது. தோழியர் பி.எஸ். செல்வா இன்னிசை வழங்கி சிறப்பித்தார்.

திருமழிசை:

சென்னை சட்டசபைக்கு வெற்றிபெற்ற அண்ணா உள்ளிட்ட 15 சட்டமன்ற உறுப்பினர்களையும், தோழர்கள் சம்பத், தருமலிங்கம் ஆகிய இருவர் பாராளுமன்றத்திற்கு வெற்றி பெற்றதையும் பாராட்டி 20—3—57-ல் திருமழிசை தி, மு. கழகத்தின் சார்பில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

சன்னாசிநல்லூர்:

அண்ணா அவர்கள் வெற்றியடைந்ததைப் பாராட்டி, 15—3—57-ல் சன்னாசிநல்லூரில் தாரை—தப்பட்டை முழங்க சிறப்பான ஊர்வலமும், தோழர் குமா. அரங்கசாமி தலைமையில் ஓர் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் பெ. வணங்காமுடி, பெ. செழியன், இரா. அண்ணாமலை, நல். சின்னசாமி ஆகியோர் பேசினர். நிகழ்ச்சிகளில் ஆதித்திராவிடப் பெருங்குடி மக்களும் கலந்துகொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கது.

மரக்காணம்:

அண்ணா அவர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டி, 10-3-57ல் மரக்காணம் தி. மு. கழகச் சார்பில் ஓர் ஊர்வலம் நடைபெற்றது; பெருமாள் கோவில் எதிரில் சிறுவர்களுக்கு இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டது.

* * *

8—3—57ல் மரக்காணம் முடி அலங்கரிக்கும் நிலைய உரிமையாளர் தோழர் சி. இராமசாமி, சிறுவர்களுக்கு இனிப்புப்பண்டங்கள் வழங்கி மகிழ்ச்சி விழாக் கொண்டாடினர்.

சந்தைப் புதுப்பாளையம்:

15—3—57 மாலை 6½ மணிக்கு சந்தைப் புதுப்பாளையத்தில் வெற்றி பெற்ற கழக வீரர்களான தோழர்கள் ப. உ. சண்முகம் பி. எஸ். சந்தானம், எஸ். எம். அண்ணாமலை, இரா. தர்மலிங்கம் ஆகியோரைப் பாராட்டிச் சிறப்பான ஊர்வலமும், மாபெரும் கூட்டமும் நடைபெற்றது.

வெற்றி பெற்றத் தோழர்களுக்கு கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் கைத் தறித் துணிகள், மலர்மாலைகள் அணிவித்தும், பானங்கள் அளித்தும் பாராட்டு தெரிவித்தனர்.

முருங்கைகளத்தூர்:

அண்ணா, மற்றும் தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, மு. கருணாநிதி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் தேர்தலில் வெற்றி பெற்றதைப் பாராட்டி 18-3-57 மாலை 4-30 மணியளவில் முருங்கைகளத்தூர் கே. வி. கே. சாமி திடலில் ஓர் மாபெரும் வெற்றி விழா நடைபெற்றது. தோழர் கே. வி. எம். ரங்கசாமி அவர்களால் மாணவர்களுக்கும், பொதுமக்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டது.

திருமணம்

17-3-57 பகல் 1 மணியளவில், நெடுவாசல் தி. மு. கழகத் தோழர் வீ. மு. இலக்குமணன்—தோழியர் ரஞ்சிதம் அம்மையார் திருந்திய திருமணம் தோழர் எம். கிருஷ்ணமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் கு. அடைக்கலம், கே. எஸ். எம். கலாநேசன் 'தமிழர் திருமணம்' என்பது பற்றிப்பேசி வாழ்த்துரை வழங்கினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

பிறப்பு

உடுமலை தி. மு. க. தோழர் அ. இரபியதீன் அவர்களது துணைவியார் ஜென்னத்பீபீ அவர்கள் 12—3—57-ல் ஒரு பெண் மகவுக்குத் தாயானார்; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

பெயர் சூட்டல்

ஒ. கொண்டாலம்பட்டி உபயாங்காடு தோழர் பி. வரதராசன் அவர்களது துணைவியார் அம்சவேணி 15-3-57-ல் ஒரு ஆண் மகவுக்குத் தாயாரானார்; அம்மகவுக்கு 'சம்பத்' எனப் பெயர் சூட்டப்பட்டது; இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பாகத் தரப்பட்டது.

மறைவு

திருப்பத்தூர் - தென்மாப்பட்டு வைக்கம் வீரர் படிப்பகம், செந்தமிழ்ப் பொது நிலைப்பள்ளி ஆகியவற்றின் ஸ்தாபகரும் பழுத்த சுயமரியாதைக்காரருமான மரு. வீர. கோவிந்தசாமி அவர்கள் 17—3—57 மாலை இயற்கையெய்தினார். அன்னாருக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் 18-3-57 அன்று செந்தமிழ் பொது நிலைப்பள்ளியில் ஓர் இரங்கற்கூட்டம் தோழர் அரு. மருதப்பா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. நகரப் பிரமுகர்கள் அனைவரும் கலந்துகொண்டனர்.

ரூ. 15 கோடிக்குப் புது வரி விதிப்பு காத்திருக்கிறது!

காங்கிரஸ் வெற்றி பெற்றதின் பலன் கைமேல் கிடைக்கிறது

மத்திய சர்க்கார், மாநிலங்களுக்கு நிதி ஒதுக்குவது பற்றி ஒரு திட்டமான கொள்கையைத் தாங்கள் வகுக்கப்போவதாகவும், இது எல்லா மாநிலங்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்த பின்னர்தான் உருவாக்கப்பட முடியும் என்றும் நிதிக் கமிஷன் தலைவர் சந்தானம் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

அடிப்படை என்ன?

'நிதி ஒதுக்கும் அடிப்படை என்னவாயிருக்கும்?' என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் சந்தானம் கூறியதாவது:—

"சில மாநிலங்கள், இது மக்கள் தொகை அடிப்படையில் இருக்க வேண்டும் என்றும், மற்றும் சிலர் மக்கள் தொகையோடு மத்திய சர்க்கார் வசூலிக்கும் வரியையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றும், மற்றும் சிலர் மக்கள் தொகையோடு பிரதேசம் அதன் பின்தங்கிய நிலை இவற்றையும் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கோரியுள்ளனர்.

"இந்த யோசனைகளை எல்லாம் நாங்கள் பரிசிலித்து வருகிறோம்; முடிவேதும் இன்னும் செய்யவில்லை.

"இந்த யோசனைகள் எல்லாம், சம்பந்தப்பட்ட மாநிலத்தின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டவை; வரப்போகும் ஐந்து ஆண்டில் இந்த மாநிலங்களில், வரவுக்கும் - செலவுக்கும் கட்டுபடியாகக்கூடிய ஒரு திட்டம் வேண்டும் என்ற நோக்கமுடையவை.

"நாங்கள் ஒரு மாநிலத்தின் வரவுக்கும் - செலவுக்கும் உள்ள இடைவெளி முழுவதையும் நிரப்ப முடியுமா என்பதை எங்களால் இப்போது கூறமுடியாது.

சரிதான்! போ!

"சர்க்கார் ஊழியருக்கு ஊதிய உயர்வு தருவதற்காக மாநில சர்க்காருக்கு, மத்திய சர்க்கார் எவ்வளவு தூரம் உதவும் என்று கேட்கப்பட்டபோது, 'இந்தக் கோரிக்கை எவ்வளவு தூரம் நியாயமானது என்பதைப் பொறுத்தே எங்கள் சிபாரிசு இருக்கமுடியும்' என்றும் சந்தானம் கூறியிருக்கிறார்.

சென்னை பின்தங்கிய மாநிலம் அல்லவாம்!

'சென்னை மாநிலம் பின்தங்கிய மாநிலமல்லவா" என்று கேட்ட

(2-ம் கலம் பார்க்க.)

இந்தியாவுக்கு வருகை தர விரும்புகிறாராம்!

புதுடில்லி, மார்ச் 20—

அமெரிக்கத் தலைவர் ஐசனோவர் இந்தியாவுக்கு வருகைதர விரும்புவதாகவும், ஆனால் அது எப்பொழுது சாத்தியமாகும் என்று அவரால் தெரிவிக்க இயலவில்லை என்றும் ராஜ்யங்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நன்றியறிவிப்பு

★

சென்னை சட்டசபைக்கு எழும்பூர் தொகுதியிலிருந்து போட்டியிட்ட என்னை அன்புடன் ஆதரித்து வெற்றி பெறச் செய்த எல்லோருக்கும் எனது உளம் நிறைந்த நன்றி உரித்தாகும். தங்கள் ஒவ்வொருவரையும் நேரில் கண்டு தெரிவிக்கும் நன்றியறிதலாக இதனைக்கொள்ள வேண்டுகின்றேன். எனது தொகுதி மக்களாகிய தங்களின் நம்பிக்கைக்கு உரியவனாகிய எனக்கு தொகுதியின் முன்னேற்றத்துக்கான சிறந்த ஆலோசனைகளைத் தந்து உதவுவதுடன் மேலும் ஒத்துழைத்து ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். நமது வட்டத்தின் குறைகளைக் களையவும், மக்கள் விருப்பத்தை நிறைவேற்றவும் திராவிட முன்னேற்றக் கழகத்தவன் என்ற நிலையில், சட்டசபையில் கடமையைத் தவறாது செய்துவருவேன்.

எனது வெற்றிக்கு அயராது பாடுபட்டதோழர்கள், தாய்மார்கள், பெரியோர்கள் ஆகிய அனைவருக்கும் எனது உளங்கனிந்த நன்றி என்றும் உரித்தாகும். என் வெற்றி தங்கள் வெற்றியே!

என் வெற்றிச் செய்தி கேட்டுத் தமது அன்பு நிறைந்த வாழ்த்துரைகளைத் தமிழகத்தினின்றும், தமிழர்கள் வதியும் பிற நாடுகளினின்றும் தந்திகள், கடிதங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொண்ட அன்புடைய தோழர்களுக்கெல்லாம் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழும் தமிழரும் முன்னேற ஒல்லும் வகையெல்லாம் பணிபுரிவேன் என்ற உறுதியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,

க. அன்பழகன்

★

தியாகராயநகர் தொகுதியில் சென்னை சட்டசபைக்குப் போட்டியிட்ட எனக்காக உற்சாகத்தோடும் ஊக்கத்தோடும் உழைத்த கழகத் தோழர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும், தங்கள் வாக்குகளை அளித்து ஆதரித்த பொதுமக்களுக்கும் என் உளங்கனிந்த நன்றியறிதலைக் கூறிக்கொள்வதோடு, வெற்றியுறாவிட்டாலும் பொதுமக்களுக்கு எப்போதும் செய்துவந்த தொண்டைச் செய்வதிலும் கழக வளர்ச்சிக்கு ஆற்ற வேண்டிய பணிகளில் கழகத் தோழர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்பதிலும் முன்நிற்பேன் என்று உறுதி கூறுகிறேன்.

அன்பன்,

ஏ. எஸ். ஜேசுபாதம்

விஞ்ஞானக் கண்ணோட்டமோ, யதார்த்த அரசியலோ?

தங்களைப்பற்றி நிர்ணயிப்பதிலேயே குழப்பம்

கழகம் பற்றி கம்யூனிஸ்டுகளின் முரண்பட்ட விமர்சனம்

"…அண்மையில் உள்ள மாநிலமான கேரளத்தோடு ஒப்பிடும்போது, தமிழ்நாட்டில் தங்களுக்கேற்பட்ட சீர்குலைவு கண்டு கம்யூனிஸ்டுக் கட்சியினர் நிலைகுலைந்து போயுள்ளனர்.

"55 இடங்களுக்கு அபேட்சகர்களை நிறுத்திவைத்தபோது அவர்கள் தங்களின் இப்போதைய பலத்தை உறுதி செய்துகொண்டு மேலும் சில இடங்களுக்கு ஆசைப்பட்டுக்கிடந்தனர்.

"சென்னையிலும் தனது கட்சி பிரமாத வெற்றிகளைப் பெறும் என்று அஜாய் கோஷ் இங்கு கூறியிருந்தார். அந்த அளவு அவர்கள் நம்பிக்கிடந்தனர். சுமார் 25 இடங்களேனும் கிடைக்கும் என்றும் எதிர்பார்த்தனர்.

"…தங்களின் வெற்றிக்கான வாய்ப்புகள் பற்றி கணக்கிட்டபோது, தி. மு. கழகத்தின் பலத்தைக் குறைத்தும் காங்கிரஸ் சீர்திருத்தக் கட்சியின் பலத்தை அதிகமாகவும் மதிப்பிட்டுவிட்டதாக கம்யூனிஸ்டுக் கட்சி தலைவர் ஒருவர் கூறினார்……

"என்றாலும் கட்சிப் பத்திரிகையான 'ஜனசக்தி' கம்யூனிஸ்டுக் கட்சி, தேசவிரோத சக்திகளை முறியடிப்பதிலும், 'வடநாட்டுச் சுரண்டலிலிருந்து சுதந்திரம் வேண்டும்,' என்ற கோஷத்துடன் தேர்தலில் ஈடுபட்ட தி. மு. கழகத்திடமிருந்து கிடைத்திருக்கக்கூடிய பலமான 'அடி'யிலிருந்து காங்கிரசைக் 'காப்பாற்றுவதிலும் கணிசமான வெற்றி கண்டிருப்பதாகக் கூறியுள்ளது.

"என்றாலும், தமிழ் மக்களிடை—குறிப்பாக இளைஞரிடை தி. மு. கழகம் தான் வேறெந்தக் கட்சியையும் விடத் தமிழர் நலன்பேணுவதில் சிறந்தக் கட்சி என்ற எண்ணத்தை உருவாக்குவதில் வெற்றி கண்டிருக்கிறது என்றும் கம்யூனிஸ்டு வட்டாரம் கருத்தறிவித்துள்ளது.

"'தி. மு. கழகத்திற்கு ஏற்பட்டுள்ள இந்தச் செல்வாக்கு தீங்கு பயப்பது' என்றும் இந்த வட்டாரம் கூறுகிறது. தங்களின் தேர்தல் இயக்கமே, காங்கிரசைத் தோற்கடிப்பதைவிட இந்தச் சக்தியை ஒழிப்பதில்தான் திருப்பப்பட்டிருந்தது என்றும் கம்யூனிஸ்டு வட்டாரம் கூறுகிறது"

—'இந்தியன் எக்ஸ்பிரஸ்'
சென்னை: 21—3—57

தலைநகரில் பாராட்டுக் கூட்டம்

★

அண்மையில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகச் சார்பில் நின்று வெற்றி பெற்றுள்ள அண்ணா அவர்களுக்கும், மற்ற எல்லாத் தோழர்களுக்கும் **31-3-57 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு** திருவல்லிக்கேணி கடற்கரையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும்.

பொதுச்செயலாளர் இரா. **நெடுஞ்செழியன்** அவர்கள் தலைமை வகிப்பார்கள்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

ரூபாய் நோட்டுகள்

புதுடில்லி, மார்ச் 22—

1956 மார்ச் 30-ந்தேதியிலிருந்து 1957 மார்ச் 1-ந்தேதி வரையில் வெளியிடப்பட்ட ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு ரூ. 48,19,76,000. 1955 ஏப்ரல் 1-ந்தேதியிலிருந்து 1956 மார்ச் 2-ந்தேதிவரையில் வெளியிடப்பட்ட ரூபாய் நோட்டுகளின் மொத்த மதிப்பு ரூ. 1,26,54,53,000.

இத்தகவலை நிதிமந்திரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

வெற்றி ஊர்வலம்

சென்னை-எழும்பூர் தொகுதியில் வெற்றிபெற்ற தோழர் க. அன்பழகன் அவர்களைப் பாராட்டி 24—3—57 காலை சென்னை—சிந்தாதிரிப்பேட்டையில் வெற்றி ஊர்வலம் நடைபெறும். 30-வது வட்ட வெள்ளிக்கடைத் தொழிலாளர்கள் வாழ்த்துப்பாவும், கைத்தறித் துணிகளும் அணிவிப்பார்கள்.

* * *

24—3—57 காலை 9-மணிக்கு, சென்னை 33-வதுவட்டம் (செகன்னாதபுரம்) தி. மு. க. கிளையிலிருந்து தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்கள் வெற்றி பெற்றதைப் பாராட்டி ஓர் ஊர்வலம் புறப்படும். கழகத் தோழர்கள், மன்றங்கள், படிப்பகங்கள், கலந்துகொள்ளுமாறு 33-வதுவட்டச செயலாளர் கேட்டுக் கொள்ளுகிறார்.

சென்னை 48-வதுவட்டத் தோழர்களுக்கு:

24—3—57 இரவு 7-மணிக்கு, சென்னை-பழைய மாம்பலம் ஈசுவரன் கோயில்தெருவில் தோழர் எஸ். பி. சுப்பிரமணியம் தலைமையில் ஓர் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும். அக்கூட்டத்திற்கு 48-வது வட்டத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சென்னை—வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகம் -

24—3—57 காலை 10 மணிக்கு, தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், தியாகராய கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. கே. சந்திரசேகரன் அவர்கள் திருக்குறளில் 'ஈகை' என்ற அதிகாரத்தை விளக்கிச் சொற்பொழிவாற்றுவார்.

'உதய சூரியன்' படிப்பகத் திறப்பு விழா

24—3—57 மாலை 7 மணிக்கு, கோவை 23-வது வட்டத்தில், தோழர் எம். சண்முகம் தலைமையில் தோழர் சி. டி. தண்டபாணி படிப்பகத்தைத் திறந்துவைப்பார். தோழர்கள் மு. இராமநாதன், சே. அ. இராசமாணிக்கம், கோவை - செழியன், வெ. கிருஷ்ணமூர்த்தி, எம். கே. எ. நடராசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நடிப்பு - இசைப் புலவர் குணமடைந்து வருகிறார்

துணைப் பொதுச்செயலாளர் நேரில் சென்று ஆறுதல் கூறினர்

சென்னை, மார்ச் 23—

நேற்று காலை சென்னை வந்து சேர்ந்த நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, 'எக்ஸ்ரே' எடுத்துக்கொண்ட பிறகு, அடையாறில் உள்ள தனது இல்லத்திற்குச் சென்றார். மாலை தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் நேரில் சென்று, விபத்தைப் பற்றி விசாரித்தார். உடல் நலம்பெற, டாக்டர்களுக்கு முழு ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு நடிப்பு-இசைப் புலவரைக் கேட்டுக்கொண்டார்.

'எக்ஸ்ரே' எடுக்கப்பட்டதில், நடிப்பு - இசைப் புலவருக்கு எதும் கவலைக்கிடமான உள்காயம் இல்லை என்று டாக்டர்கள் அறிவித்ததாக நடிப்பு - இசைப் புலவர் தெரிவித்து, துணைப் பொதுச்செயலாளரிடம் உடல் நலமில்லாத நிலையிலும்கூட, கழகத்தைப் பற்றியும், மற்ற பொதுப் பணிகளைப் பற்றியும் விசாரித்தார்.

நடிப்பு-இசைப் புலவருக்கு மார்பிலும், இடது பக்கத்திலும் பற்றுப் போடப்பட்டுள்ளது. மற்றபடி அவர் வழக்கமான முகமலர்ச்சியுடன் காணப்பட்டார்.

துணைப் பொதுச்செயலாளருடன், ஏ. எஸ். வேணு, கே. எம். கண்ணபிரான், சோமு, கிருஷ்ணமூர்த்தி, இளவரசு ஆகியோர் சென்றிருந்தனர்.

பாக்தாத் ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் பங்கு

ராணுவத் துறையிலும் சேர்ந்துகொள்ள முடிவு!

ஹாமில்டன், மார்ச் 22—

பாக்தாத் ஒப்பந்தத்தின் இராணுவக் கமிட்டியில் தான் சேர்ந்துகொள்ள விரும்புவதாக அமெரிக்கா, பிரிட்டிஷ் பிரதமர் மாக்மில்லனிடம் கூறியுள்ளதாம்.

இங்கு நடைபெறும் மாக்மில்லன்—ஐசனோவர் பேச்சுவார்த்தைகளின்போது இது தெரிவிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, பாக்தாத் ஒப்பந்தத்தில் அமெரிக்காவின் பங்கு, பொருளாதாரத் துறை ஈடுபாட்டுடன் இருந்தது என்றும் இப்போது இராணுவப் பிரிவிலும் அது ஈடுபடுவதாகவும் கூறப்படுகிறது.

"இராணுவத் துறையில் அமெரிக்கா பங்கு பெறுவது எவ்வகையான அரசியல் முக்கியத்துவமும் உடையதல்ல" என்றும் கூறப்பட்டுள்ளது.

வட கிழக்கு இந்தியாவில் அணு மூலப் பொருள்கள்

ஏராளமாகக் கிடைப்பதாகக் கண்டுபிடிப்பு!

பம்பாய், மார்ச் 22—

அணுசக்தி மூலப் பொருள்கள் ஏராளமான அளவில் — வடகிழக்கு இந்தியாவின் ஏதோ ஒரு பகுதியில் காணப்பட்டிருக்கிறதாம்.

இந்தப் பகுதியில் கிடைக்கும் மூலப் பொருள்களின் அளவு, உலகத்திலேயே மிக அதிகமானது என்றும் நம்பப்படுகிறதாம்.

இந்திய அணுசக்தி இலாகா இதனைக் கண்டுபிடித்துள்ளதாம்.

இதுகாறும் திருவாங்கூர் கடற்கரைப் பகுதியில் கிடைக்கும், மூலப் பொருள்கள், உலகின் வளமானவற்றுள் ஒன்று எனக்கொள்ளப்பட்டுவந்ததாம்.

இப்போது வடகிழக்கு இந்தியாவில், யுரேனியம், தோரியம் ஆகிய அணு மூலப் பொருள்கள் கொண்ட படிவங்கள் மூன்று இலட்சத்துப் பத்தாயிரம் டன் வரை கிடைத்திருப்பதாகவும், மேலும் ஆராய்ந்தால் இதுபோல இரண்டு மடங்கு கனிப் பொருள்கள் கிடைக்கலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

வெற்றி விழா

24—3—57 நண்பகல் 12 மணியளவில் சென்னை 39-வது வட்டத் தோழர்கள், தி. மு. க. பணிமனை அருகில், தி. மு. க. அபேட்சகர்களின் வெற்றியைப் பாராட்டி ஏழை மக்களுக்கு உணவு அளிப்பர்.

'இரு தேசக் கொள்கையைப் பாகிஸ்தான் கைவிட வேண்டும்'

நேரு பண்டிதரின் கோரிக்கை

புதுடில்லி, மார்ச் 21—

"இரண்டு தேசக் கொள்கை அடிப்படையில் பாகிஸ்தான், எதையோ உருவாக்க முயற்சிக்கிறது; அதன் விளைவு ஒரு 'பிடி' கிடைக்காமல் அவர்கள் திண்டாடுகிறார்கள்.

"எனவே, காஷ்மீர் வேணடுமென பாகிஸ்தான் எந்த அடிப்படையில் கோருகிறதோ, அந்த அடிப்படையான இரண்டு தேசக் கொள்கையைக் கைவிடுமாறு கோருகிறேன்.

"காஷ்மீர் பற்றிய அடிப்படையான பிரச்சினை எல்லாம், காஷ்மீரில் பாகிஸ்தான் செய்த ஆக்கிரமிப்புத்தான் என்ற இந்திய நிலையை மீண்டும் மீண்டும் கூறவிரும்புகிறேன்"

என்பதாகப் பண்டித நேரு, மக்கள்சபையில் கூறியிருக்கிறார்.

தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று கொண்டாடிய பெருமை எங்கே?

பர்மாவிலிருந்து 5 இலட்சம் டன் அரிசி இறக்குமதி செய்ய முடிவு

புதுடில்லி, மார்ச் 22—

தற்போது சுமார் 2 இலட்சம் டன் அரிசி கையிருப்பில் இருக்கிறதென்றும், 1957-ம் ஆண்டில் பர்மாவிலிருந்து மேலும் 5 இலட்சம் டன் அரிசியைக் கொள்முதல் செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறதென்றும். மத்திய உணவு-விவசாய மந்திரி இன்று மாநிலங்கள் சபையில் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தாராம்.

இந்த ஆண்டு வேறெந்த நாட்டிலிருந்தும் அரிசி வாங்கும் விஷயம் சர்க்காரின் பரிசீலனையில் இருந்து வருகிறதென்றும் இது விஷயமாக முடிவு எதுவும் இன்னும் செய்யப்படவில்லை என்றும் உணவு-விவசாய அமைச்சர் கூறினாராம்.

கிராமக் கைத்தொழில்கள் அபிவிருத்திக்கு நிதி உதவி!

சென்னைக்குக் கிடைத்தது எவ்வளவோ?

புதுடில்லி, மார்ச் 22—

கிராமக் கைத்தொழில்கள் சம்பந்தமான அபிவிருத்தித் திட்டங்களுக்காக இந்திய சர்க்கார், 1957 பிப்ரவரி கடைசிவரையில் கதர்-கிராமக் கைத்தொழில்கள் கழகத்திற்கும், மாநில சர்க்கார்களுக்கும் மானியங்களாகவும் கடன் தொகைகளாகவும் மொத்தம் ரூ. 4,04,71,607 அனுமதித்துள்ளனராம்.

கரும்புப்பயிரை அழிக்கும் பூச்சிகள் பற்றி 'சர்வே'

புதுடில்லி, மார்ச் 22—

கரும்புப் பயிர்களைத் தாக்கும் பூச்சிகள் பற்றி சர்வே, ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்வதற்காக மேலும் 15 இடங்களில் ஆராய்ச்சி நிலையங்களை ஏற்படுத்தவேண்டும் என்று, இந்திய மத்திய கரும்புக் கமிட்டியின் பூச்சி இயல் உப-குழுக்கூட்டத்தில் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.

சொற்பயிற்சிக் கூட்டம்

சென்னை—புதுவண்ணையம்பதி வள்ளுவர் இளைஞர் மன்றக் கட்டிடத்தில், 23—3—57 இரவு 8-மணியளவில் தோழர் துலக்கானம் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும். 'காலமும்-கருத்தும்' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை-திருவொற்றியூர் தி.மு.க. பொது உறுப்பினர்கட்கு:

24—3—57 காலை 9 மணிக்கு, கழகப் பணி மனையில், கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும்; அதுபோது பல முக்கியப் பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.